ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1945/41 - 2015 දෙසැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2015.12.18

*1945/41 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆவது உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2015, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2015, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, திசெம்பர் 17.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர் (இல. 3) தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :

(அ) அவ்வறிவித்தலில் I மற்றும் III ஆகிய நிரல்களில் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம் :-

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. நாட்டில் தேசிய ஒருங்கிணைப்பையும், மீளிணக்கத்தையும், நீடித்து நிற்கக் கூடிய சமாதானத்தையும் ஊக்குவித்து, முன்னேற்றுதல் | தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்கப் பணியகம் (அமைச்சின் பணிகளை செயற்படுத்துகின்ற நிறுவனம் ஒன்றாகும்) | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 2. தேசிய ஒருங்கிணைப்புக்கும், மீளிணக்கத்துக்குமான ஒரு தேசியக் கொள்கையை வகுத்தமைத்தல் | | |
| 3. நல்லிணக்கத்தை முன்னேற்றும் வகையிலும், அனைவரையும் உள்ளடக்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதினூடாகத் தேசிய ஐக்கியத்தை உருவாக்கும் வகையிலும் நிகழ்ச்சித் திட்டங்களையும், கருத் திட்டங்களையும் வகுத்தமைத்தல் | | |
| 4. வெளிக்கள மட்டத்தில் நடைமுறைக் கிடப்படும் இயைபுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் கண்காணிப்பும், மதிப்பீடும் | | |
| 5. தேசிய ஒருங்கிணைப்புக்கான மட்டுப் பாடுகளை இனங்கண்டு, இயைபுள்ள நலன்பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் மற்றும் இணக்க நடவடிக்கைகளினடிப்படையிலான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | | |
| 6. தேசிய ஒருமைப்பாடு, மீளிணக்கம், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் செயற்படும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒத்துழைப்பாகச் செயற்பட்டு, அமைச்சுக்கள், திணைக் களங்களுக்கிடையில் பிரச்சினைகள் இருப்பின் அவற்றைத் தீர்த்து வைத்தல் | | |
| 7. தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் மீளிணக்கம் சம்பந்தமாகத் தற்போது நடைமுறைக்கிடப்படும் மற்றும் நடைமுறைக்கிடப்படவுள்ள பல்வேறு | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| உத்திகளை மீளாய்வு செய்தலும், விவகாரங்களுக்குத் தீர்வுகாண்பதில் இடையீடு செய்தலும் | | |
| 8. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைக்கிடுவதோடு தொடர்புற்ற விடயங்களில் அவசியமானவிடயங்களில் இடையீடு செய்தல் | | |
| 9. (அ) மீளிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் | | |
| (ஆ) சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மீளிணக்க செயல்முறையில் எழக்கூடிய விவகாரங்கள் மற்றும் | | |
| (இ) இத்தகைய விவகாரங்களுக்குப் பொருத்தமான தீர்வுகளை முன்மொழிதல் தொடர்பாக அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கல் | | |
| 10. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் நடைமுறைக்கிடுவதற்கான நிதிகளைத் தேடிப் பெற்றுக் கொள்ளுதல் | | |
| 11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் | | |
| 12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

(2) அவ்வறிவித்தலில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் (இல. 50) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அத்தலைப்பானது "(49) அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்" எனவும் ;

*(3) அவ்வறிவித்தலில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் (இல. 50) என்ற தலைப்பின் I, II, III ஆகிய நிரல்களுக்குப் பின்னர் பின்வரும் தலைப்பைச் சேர்ப்பதன் மூலம் :-*

**(50) விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. தேசிய தேவைப்பாடுகளுக்கமைய அமுல்படுத்தவேண்டிய மற்றும் உடன் கவனம் செலுத்தவேண்டிய துறைகள் தொடர்பிலான விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்தல் | | |
| 2. அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்படும் விசேட கருத்திட்டங்களை தொடர்புடைய ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல் | | |
| 3. விசேட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ஏனைய அமைச்சர்களுக்கு ஒத்துழைப்பு நல்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு நடடிக்கைகள் | | |
| 4. பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவின் பணிகளை ஒருங்கிணைப்பு செய்தல் தொடர்பான அலுவல்கள் | | |
| 5. அபிவிருத்தித் துறைபற்றிய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல் | | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.